முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குதம்பைச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.03.2019, புதன்கிழமை

1. **கலிமீட்பின் ஞானகுரு அரங்கா**
**கருணை வடிவான ஞானதேசிகா**
**அழியாமை தந்து காக்க வந்த**
**ஆறுமுக அரங்கமகா தேசிகா**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிக்க **விளம்பி சாலின் திங்கள்**
**ஆசிபட இருபான் நவதிகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 29ம் நாள் 13.03.2019, புதன்கிழமை)**
**அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி**

3. **ஆசியை குதம்பைச்சித்தர் யானும்**
அறிவிப்பேன் உலகோர் நலம் பெற
ஆசிபட அரங்கன் தருமம் தேடி
அளவிலா பொருளுதவி செய்து

4. செய்துமே தருமந்தனை பெருக்கி
சிறப்பான சரவணசோதி வழிபாட்டை
அய்யமற உலகோர் ஏற்றுத் தொடர
அரங்கா முருகா எனும் செபம் செய்துவர

5. வருகவே மக்களுக்கு வாழ்வில்
வந்தடையும் மாற்றம் ஏற்றம்
ஆறுதலான சூழல் எங்கும் உருவாகி
அகிலமே சுத்த சைவநெறி முறை

6. முறையாக பரவுதல் கண்டுவிட
முழுமை ஞானம் பேருலகமே
குறைவில்லா அரங்கன் வழிநடத்த
கூறிடுவேன் பரவி ஞானயுகமாகும்

7. ஆகவே அரங்க ஞானியர்க்கு
அருட் சீடர்களாகி தீட்சை அடைந்து
வகைபட தொண்டுகள் பெருக்கி
வையகமெங்கும் வலம் வருதலுற

8. வருகவே பேருலகம் தனில் அரங்கன்
வள்ளல் தன்மை விரிவடைந்து
முருகக் கடவுளின் வழிபாடு வளர
மொழிகுவேன் உண்மை நிலை மக்களிடை

9. மக்களிடை உறுதி நிலை ஆகி
மாண்புள்ள சீடர்கள் ஆக உலகோர்
தேக்கமிலா உயர்ந்து சிறந்து
தெளிவு திட ஞானமிக்க மக்களாகி

10. ஆகியே அரங்கன் சபை தொடரும்
அனைவரும் ஞானிகள் ஆவர்
அகிலமதில் தவசித்தி கொண்டு
அறமுடன் மக்கள் திறன் வளர்க்கும்

11. வளர்க்கும் உயர்சபை தானும்
வல்லமை கூடி கலியுகத்தில்
தளர்விலா தரும ஞான பலமிக்க
தரும ஞான சபையாகி உயரும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் குதம்பைச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

துன்பம்மிக்க கலியுகத்தின் கோரப்பிடியில் இருந்து மக்களைக் காத்து ரட்சிக்கவே மக்களை வழிநடத்தி கலியுகத் துன்பங்களிலிருந்து மீட்கவே ஞானகுருவாக அவதரித்த ஆறுமுக அரங்கமகா தேசிகா கருணையே வடிவான ஞானதேசிகா அழிவிலாமை எனும் ஞானம்தனை தந்து மக்களை காக்க வந்த ஆறுமுக அரங்கமகா தேசிகா அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 29ம் நாள் 13.03.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே குதம்பைச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குதம்பைச்சித்தர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்திடும் அற்புதம்மிக்க தானதருமச் செயல்களுக்கு அளவிலாது பொருளுதவிகள் செய்து அரங்கன் ஆசி பெற்று தருமத்தினை பெருக்கி சிறப்புமிக்க வல்லமையான சரவணஜோதி வழிபாட்டினை சந்தேகம் இன்றி உலக மக்கள் எல்லாம் ஏற்று வழிபாடுகள் செய்து தொடர்ந்துவர, ஆறுமுகனே அரங்கமகானே முருகா, அரங்கா, அரங்க முருகா என்றே தினம் தினம் மறவாது ஜெபதபங்களை செய்து வரவர, செய்து வரும் மக்களுக்கு வாழ்வில் பல நல்லவிதமான மாற்றங்கள் வந்தடையும் நல்ல முன்னேற்றங்களை காண்பார்கள். அவர்களுக்கு உண்டான துன்ப சூழ்நிலைகள் எல்லாம் மாறி நல்ல சூழ்நிலையாக உருவாகிடும். உலகமெங்கும் சுத்த சைவநெறிமுறை முறையோடு பரவி, மக்களெல்லாம் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு வரவர, முழுமையான ஞானம்தனை உலகோர்க்கு அளித்து இந்த உலகினை ஞானவழியினில் குறையேதும் இன்றி வழிநடத்திட இந்த உலகம் அரங்கமகானின் வழி நடத்தலில் ஞானயுகமாகும்.

ஆகவே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருட்சீடர்களாக ஆகி அரங்கரிடத்து அருளாசிகளையும் தீட்சைகளையும் அடைந்து முறையோடு தொண்டுகளை அதிகமாகச் செய்து உலகமெங்கும் அரங்கன் புகழ் பரப்பி வரவர, உலகினில் அரங்கமகா தேசிகனாரின் தானதருமச் செயல்களும் வள்ளல் தன்மையும் அதிகமாகி விரிவடைந்து நிற்கும். முருகப்பெருமானின் வழிபாடு உலகமெங்கும் பெருகி வர, உண்மை ஞானநிலை மக்களிடையே உறுதிபட தெளிவாகி உறுதியும் ஆகி அரங்கனை பின் தொடர்கின்றோர் எல்லாம் உறுதிபட நடந்து தடையின்றி உயர்வடைந்து சிறந்து விளங்கி அரங்கனின் சீடர்களாக ஆகி, தெளிவும் திடமும் ஞானமும் மிக்க மக்களாகி அரங்கன் சபையில் தொடர்ந்து அங்கம் வகித்து அரங்கன் சேவையில் உயர்வடைந்து அனைவரும் ஞானிகளாக ஆகிடுவார்கள்.

உலகினில் அளவற்ற தவங்களைச் செய்து தாம் பெற்ற அளவிலாத தவ ஆற்றலை தவசித்திகளை அரங்கனும் மக்களுக்கு அளித்து அறத்துடன் மக்களின் திறமைகளையும் வளர்க்கும் உயர் ஞானசபையாகிய ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் வல்லமைமிக்கதாக ஆகி, மேலும் மேலும் வல்லமை பெருகி கலியுகத்தில் தளர்வில்லாத தரும ஞானபலம்மிக்க தரும ஞானசபையாக வளரும் உயரும் மாண்பு பெறும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குதம்பைச்சித்தர்.

–சுபம்–